APPENDIX I

[*Vide* answer to Starred Question No. 151 at page 8.]

I. *Industrial Training Institute.*

The following concessions have been made available to the Burma and Ceylon repatriates seeking admission in Industrial Training Institutes: —

(1) Five per cent of sanctioned seats in each Industrial Training Institute is reserved for Indian nationals returning from Burma and Ceylon.

(2) The prescribed minimum educational qualifications and age-limit are relaxed to the extent necessary.

(3) Exemption from appearing for the Aptitude Test which is conducted before admission is granted if the number of applicants is smaller than the number of seats reserved for them.

(4) A stipend of Rs. 45 each per mensem is awarded to them during the period of training, subject to the condition that the trainees concerned stay away from their parents and the parents are not in a position to meet the extra expenditure involved and their average monthly income does not exceed Rs. 400.

II. *Polytechnics.*

With effect from 1964-65, one seat in each of the Government Polytechnics shown below is reserved for admission of bona fide Indian students migrating from Burma and Ceylon :—

For Burma Repatriates at —

(1) Central Polytechnic, Madras-20.

(2) Government Polytechnic, Coimbatore-14.

(3) Government Polytechnic, Vellore-2.

(4) Government Polytechnic, Nagercoil.

(5) Tamilnad Polytechnic, Madurai.

For Ceylon Repatriates at —

(1) Tamilnad Polytechnic, Madurai.

(2) Government Polytechnic, Nagercoil.

(3) Government Polytechnic, Tuticorin.

No financial assistance in the form of stipend or book allowance has been granted to the repatriate trainees admitted in the polytechnics.

[6th August 1966

I. தொழில் பயிற்சி நிறுவனங்கள்.

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தாய்நாடு திரும்பியோருக்குத் தொழில் பயிற்சி நிறுவனங்களில் சேருவதற்கும் கீழ்க்கண்ட வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன:—

(1) தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப் பட்டுள்ள இடங்களில் ஐந்து சதவீதம் பர்மாவிலிருந்தும், இலங்கை யிலிருந்தும் தாய்நாடு திரும்பும் இந்தியருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) நிச்சயிக்கப்பட்ட குறைந்த அளவு கல்வித்தகுதிகளும், வயதுவரை யறையும் அவசியமான அளவுக்குத் தளர்த்தப்படுகின்றன.

(3) விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அவர்களுக்காக ஒதுக்கி யுள்ள இடங்களைவிடக் குறைவாக இருப்பின், சேர்ப்பதற்கு முன் நடத்தப் படும் தொழில் ஆர்வத்தேர்வினின்று (Aptitude Test) விலக்கு அளிக்கப்படு கின்றது.

(4) பயிற்சிக்கால அளவில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவிப்பணம் வழங்கப்படுகின்றது. ஆனால் அது கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டதாகும்:— பயிற்சி பெறுவோர் பெற்றோருடன் இல்லாமல் தொலைவில் தங்கிப் பயிற்சி பெறுபவராயிருக்க வேண்டும். அவர்களுடைய பெற்றோர் மேற்படி பயிற்சிக்காகும் கூடுதல் செலவைக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கவேண்டும். மேலும் அவர்களுடைய சராசரி மாத வருமானம் ரூ. 400-க்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

II. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்.

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தாய்நாடு திரும்பும் இந்திய மாணவர்களுக்காக 1964–65 முதல் கீழ்க்கண்ட அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஓர் இடம் ஒதுக்கப்படுகிறது:—

பர்மாவிலிருந்து தாய்நாடு திரும்புவோருக்காக —

(1) மத்தியப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, சென்னை-20.

(2) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, கோயம்புத்தூர்-14.

(3) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, வேலூர்-2.

(4) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோயில்.

(5) தமிழ்நாடு பல்தொழில் பயிற்சிப்பள்ளி, மதுரை.

இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்புவோருக்காக —

(1) தமிழ்நாடு பல்தொழில் பயிற்சிப்பள்ளி, மதுரை.

(2) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, நாகர்கோயில்.

(3) அரசாங்கப் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, தூத்துக்குடி.

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கப்படுபவர்களுக்கு (பர்மா, இலங்கை அகதிகள்) பயிற்சி உதவிப் பணம் அல்லது புத்தகப்படி போன்ற நிதி உதவி எதுவும் வழங்கப்படவில்லை.